# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 13/2025 நாள்.09.03.2026

PW1- திரு.விஜயபாஸ்கர் , த/பெ. திரு.கோவிந்தராஜ்

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்குரையில் சொன்ன விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். அ.வ எண் 131/15 என்ற வழக்கை பற்றி பிராதில் சொல்லியுள்ளோம் என்றால் ஆமாம். மேற்படி வழக்கு இவ்வழக்கின் பிரதிவாதியால் தாக்கல் செய்யபட்டது என்றால் ஆமாம். அந்த வழக்கில் வாதி விளம்புகை பரிகாரம் மற்றும் உறுத்துகட்டளை பரிகாரம் கோரியிருந்தார் என்றால் அது எனக்கு சரியாக நினைவில்லை. அந்த வழக்கில் ஆணையர் நியமனம் செய்யபட்டார் என்றால் ஆமாம். விஏஒ மற்றும் சர்வேயர் முன்னிலையில் இடம் அளந்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யபட்டது என்றால் ஆமாம். அந்த வழக்கில் 12நபர்கள் பிரதிவாதிகள் என்றால் ஆமாம். அந்த வழக்கில் நான் முகவராக இருந்த பத்மினி 12வது பிரதிவாதி என்றால் ஆமாம். அந்த வழக்கு இவ்வழக்கின் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கபட்டது என்றால் ஆமாம். அந்த தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல்செய்யபட்டு மாண்புமிகு உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். அந்த வழக்கின் சொத்தும் இந்த வழக்கின் சொத்தும் வெவ்வேறா ஒன்றா என்றால் புலஎண்ணில் ஒரேசொத்தாக ஒருபகுதி வருகிறது. அந்த வழக்கு பிரதிவாதிகள் 1 முதல் 12க்காக கிருஷ்ணராமானுஜம் என்பவர் முகவராக இருந்து வழக்கை நடத்தினார் என்றால் ஆமாம். அ.வ எண் 422/2007 என்ற வழக்கை பிராதில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் ஆமாம். அந்த வழக்கில் இவ்வழக்கின் பிரதிவாதி தரப்பினர் இல்லை என்றால் ஆமாம். அ.வ.எண் 422/2012 என்ற வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதி புதிய வழக்கு தாக்கல் செய்ய நீதிமன்ற அனுமதி பெற்றுகொண்டு அந்த வழக்கை வாப்பஸ் வாங்கினார் என்றால் ஆமாம். மேல்முறையீடு தாக்கல் செய்துவிட்டு அது நிலுவையில் இருக்கும்போது இந்த வழக்கு தாக்கல் செய்து ஏதாவது பரிகாரம் கிடைக்குமா என்று எதிர்நோக்குகிறேன் என்றால் சரியல்ல. மேல்முறையீட்டு வழக்கில் 12பேரும் தரப்பினர் என்றால் இல்லை சிலதான் உள்ளார்கள். இந்த வழக்கில் நாங்கள் விளம்புகை பரிகாரமும், சுவாதீன மீட்சி பரிகாரம் பகுதி சொத்திற்கு

கோரியுள்ளோம் என்றால் முழுமையாக கோரியுள்ளோம். அந்த வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதி அவருக்கு சொந்தமில்லாத சொத்தை வாங்கி கட்சி செய்கிறார் என்ற நாங்கள் சொன்னபோதும் அந்த வழக்கு அவருக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்றால் ஆமாம். அந்த வழக்கில் இந்த பிரதிவாதி கிரைய சாசனம் மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களை தாக்கல் செய்தார் என்றால் எனக்கு நினைவில்லை. ஏற்கனவே வழக்கின் பிரதிவாதிக்கு தீர்ப்பு ஏற்பட்டநிலையில் அதை நீக்கரவு செய்யவதற்காக இந்த தாவா தாக்கல் செய்யபட்டது என்றால் நான் என் சொத்துக்காக தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கின் பிராதில் சொல்லபட்ட என் கட்சிகள் யாவும் மேல்முறையீட்டிற்கு சொல்லவேண்டிய கட்சிகள் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் அதிகாரம் பெற்ற முகவர் ராமானுஜத்தை விசாரித்தபிறகுதான் தீர்ப்பு வந்தது என்றால் ஆமாம்.அந்த வழக்கிலிருந்து பத்மினி ஒருவர் மட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். ஏற்கனவே தாவா சொத்தை பொறுத்து தீர்ப்பாகிவிட்ட நிலையில் அதே சொத்தை பொறுத்து மீண்டும் ஒரு வழக்கு நிலைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. மேல்முறையீடு நிலுவையில் உள்ள சொத்தும் இந்த பிராதில் உள்ள சொத்தும் ஒரே சொத்து என்பதால் முந்தைய வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு இந்த வழக்கை கட்டுபடுத்தும் என்று சொன்னால் இரண்டும் ஒன்று என்று ஏதும் குறிப்பிடப்படவில்லை. எப்படி சொல்கிறேன் என்றால் 60/5 என்ற சொத்தை அந்தோணிசாமிஉடையார் வாங்காமலேயே விற்றுள்ளார் அதனால் சரியல்ல. முந்தைய வழக்கு கிருஷ்ணராமானுஜம் என்பவர் முகவராக இருந்து நடத்தி தோற்றுவிட்டதால் தற்போது பத்மினி என்பவர் என்னை அதிகார முகவராக வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்றால் ஏற்றுகொள்ளமுடியாது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.09 18:52:36 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**